Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து,... கன்மலையின் மேல் உயர்த்துவார் சங்.27:5 மேய் 2025 **No.5**

கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளுதல்

To know the love of Christ

Arthur. W. Pink (1886 - 1952)

"…..அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள"
- எபே.3:19.

ஊட்டச்சத்திற்கும், ஆரோக்கியத் திற்கும், கனிதரும் வாழ்வுக்கும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் கிறிஸ்துவின் ஆழமான, கரையில்லாத கடல் போன்ற அன்பில் நிறைந்திருக்க வேண்டும். நமது ஆண்டவர், யோவான் 15:9 ல் "பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல, நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்று கூறியிருக்கிறார். இந்த அன்பு விவரிக்க முடியாதது. ஆனாலும் இந்தப் பொருளின் மீதுதான் நமது இருதயங்கள் தொடர்பாக இணைந்து ஆசீர்வதிக்கப் படுகின்றன.

"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல, நானும் உங்களில் அன்பாயிருக் கிறேன்". பிதா கிறிஸ்துவை அனாதி காலமாக நேசித்தது போல கிறிஸ்துவும் நம்மை சந்தோஷமாக, விசேஷித்த அன்புடன், மாறாத, நிலைத்திருக்கும் நித்திய அன்பால் நேசிக்கிறார். கிறிஸ்து தமது சபையை முழு ஆத்துமாவோடும் நேசித்தார். அது நித்திய கால அன்பு. அவரது இருதயம் தமது மணவாட்டி மீது காலங்களுக்கு முன்னே பதிந்திருந்தது. சபையை பிதா கொடுத்த அன்பின் வெகு மதியாக நேசித்தார். அழகிய மகிமையும், சிறப்பும் மிக்கவளாக மகிமையின் ராஜ்யத்தில் என்றென்றும் பிரகாசிக்க மனைவியாக பிதா அவருக்கு அளித்தார். அவர் அவளை மறை பொருளான சரீர மாகவும் அதில் அவருடைய அனைத்து மகிமையும் வெளிப்படவும், புகழப் படவும் ஏற்றுக் கொண்டு நேசித்தார். அவர் சபையை அவரது 'சொந்த சம்பத்து' யாத்.19:5 என கூறுகிறார். அவர் அவளுக்கு ஜீவன், ஒளி, பரிசுத்தம், நீதி, பரிபூரணம், மகிமை ஆகியவைகளா யிருந்து அவரிடமிருந்து அவைகளைப் பெற வேண்டும். அவர் அவளுக்கு நித்திய தலையாகவும் கணவனாகவும் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பின் ஊற்று அவரது மணவாட்டிக்கு புரிந்து கொள்ள முடியாதது. அது உயரியது. அவரது அன்பு பிதாவின் அனாதி அன்பிலிருந்து ஆரம்பமானது. அவர் தேவ மனிதன். விசுவாசிகள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அன்பின் அழகிய மணவாட்டிகள். அன்பான குமாரனுக்காக ஆயத்தமாகிற வர்கள்.

தெய்வீக மகிமையும் அன்பும்

தனது ஜனத்துக்காக கிறிஸ்துவின் அன்பும் உணர்ச்சியும் எண்ணுக்கடங் காததுமாகும். அவரது தெய்வீக நபரத்துவம் அவரது நித்திய பரிபூரண அன்புக்கு முத்திரை பதிக்கிறது. அதோடு அவரது தகுதி, நற்பண்பு, மன்றாட்டு செயல்கள் போன்றவற்றிற்கும் அது அடையாளமாயிருக்கிறது. அவர் ஜீவிக்கிற தேவனுடைய குமாரன். அவர் மூலமாக சபை நேசிக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டது. இது உலகத்தின் அஸ்தி பாரத்திற்கு முன்பே நடைபெற்றது. அவரது ஜனங்கள் அவரது பங்காளிகளாக தெய்வீக நியமனம் பெற்றவர்கள். அவர்கள் அவரது கிருபை, மகிமை எல்லாவற்றிலும் பங்காளிகள், இரட்சிக் கப்பட்டவர்கள் பரத்தில் அவரோடு வாழுவதே அவரது இருதயத்தை திருப்திப்படுத்தும். அவர்கள் அவரை அவரது முழு மகிமையிலும் பரிபூரண சந்தோஷத்திலும் காண்பார்கள். அவரில் அடங்கியிருக்கும் அன்பு பரிசுத்தவான் களாலும் புரிந்து கொள்ள முடியாது. அந்த மகிமை அவரது மனித அவதாரத் திலும், கீழ்ப்படிதலிலும், பாடுகளிலும் வெளிப்படுவதை பரிசுத்தவான்கள் போதுமான அளவு அறிந்து புகழவும் அவரை ஆராதிக்கவும் கூடாதிருந்தது. ஆழமான நன்றி தான் நாம் இந்த அன்பை அறிந்து கொள்ளவும், விசுவாசிக்கவும் அதை அனுபவிக்கவும் காரணமாகிறது.

கிறிஸ்துவின் அன்பு இத்தனை மேம்பட்டதாகவும், மறைபொருளாகவும் முடிவற்றதாகவும், புரிந்து கொள்ளக் கூடாததாகவும் இருக்கும் போது நாம் அதைப் புரிந்து கொண்டு அறிந்து கொள்ள முடியுமா? அது முடியாதது தான். ஆனாலும் அது நம்மைத் திருப்தி படுத்தக்கூடியது. கிறிஸ்துவின் அன்பை சத்திய வசனத்தில் கண்டு பிடிக்கலாம். தூய ஆவியானவர் நம்மை விழிப் படையச் செய்யும் போது நாம் அதனு டைய அதிசயங்களையும் ஆசீர்வாதங் களையும் அறிந்து கொள்ளக் கூடியவர் களாகிறோம்.

அவரது அன்பு உங்கள் வாழ்வை வடிவமைக்கட்டும்

கிறிஸ்தவனுடைய முக்கிய ஆவிக் குரிய பணி என்பது கிறிஸ்துவின் அற்புத மான அன்பை சிந்திப்பதும் புகழுவதும், அந்த நினைவில் வாழுவதுமாகும். இறுதியில் இருதயம் அனலடைந்து, ஆத்துமா துதியினால் வழிந்தோடி, வாழ்வு தாக்கமடைகிறது. ஒவ்வொரு நாளும் இதன் குணங்களான சுயாதீனம், பரிசுத்தம், கறைபடாமை ஆகியவற்றை சிந்திக்க வேண்டும். நாம் நம்மை நேசிப்பதைவிட கிறிஸ்து நம்மை அதிகமாக நேசிக்கிறார். நாம் அவரை வெறுத்தபோதே அவர் நம்மை நேசித் தார். நம்மை நேசிக்கிற அன்பு எதினாலும் மாறாது. அவருடைய அன்பின் வெளிப் பாடுகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். முதலாவது பிதாவின் திட்டத்தை நிறைவேற்ற விழுந்து போன மக்களுக்காக தம்மை ஒப்புக் கொடுக்க எடுத்த தீர்மானம். பின்பு பரலோகின் ஆசீர்வாதங்களையும், தூதர் சேனை களால் வணங்கப்பட்டதையும் விட்டு, இவ்வுலகில் காணப்பட்ட பாவம், குழப்பம், பாடுகள் எல்லாவற்றையும் காண வந்தார். இந்த அன்பு எப்படிப் பட்டதாயிருந்தது!

யெகோவா அவரை தூதர்களை விடத் தாழ்வான ஒரு நிலைக்குக் கொண்டு வந்தார். வார்த்தை மாம்சமாகிய போது அவரது தெய்வீக மகிமை ஏறக்குறைய மறைந்து போயிற்று. சொல்லி முடியாத சிறுமையைப் பார்ப்போம். பரலோக சிங்காசனத்திற்கும் பெத்லகேம் புல்லணைக்குமிடையி லுள்ள வேறுபாட்டை அளந்து பார்ப் போம். மனித அவதாரம் எடுத்த போதும், புகழ் பெருமை அற்றவராக "அடிமை யின் ரூபமெடுத்தார்" பிலி.2:7. அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படியாகவும் தமது ஜீவனைக் கொடுத்து அனேகரை மீட்கும்படியாகவும் வந்தார். அவருக்கு எத்தகைய துன்பங்கள் கிடைக்கும் என்பது முன்னதாகவே அவருக்குத் தெரியும். வரவேற்கப்பட்டு, பாராட்டப் பட்டு, அன்புகூரப்பட்டு ஆராதிக்கப் படுவதற்குப் பதிலாக அவர் அவமதிக்கப் பட்டு புறக்கணிக்கப்படுவார் என்று அவர் தெரிந்திருந்தார். அவர் நன்மை செய்கிற வராக சுற்றி நடந்து, பிணியாளிகளை சுகமாக்கி, தேவைப் பட்டோருக்கு உதவி செய்து, எளியோருக்கு சுவிசேஷத்தை அறிவித் தாலும் எதிர்க்கப்பட்டு, மார்க்கத் தலைவர்களால் பாடுபடுத்தப்படுவார் என்றும், காரணமின்றி பகைக்கப்பட்டு தப்பெண்ணங்கொள்ளப்பட்டு இறுதி யில் தனது சொந்த சீடர்களாலும் கைவிடப்படுவதையும் அறிந்திருந்தார். ஆயினும் அவரது அன்பு எத்தகையது? அது அறிவுக்கு எட்டாதது. நமது வாழ்வில் தொடர்ந்து, நமது இருதயங் களை அந்த அன்பு நிரப்பி, நமது வாழ்வை வடிவமைக்க வேண்டும்!

உள்ளே ..... சிங்க கெபியோ சூளை நெருப்போ அவர் என்னை காத்திடுவார்

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh,
Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங். 85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன் யாத். 23:25.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 மேய் மாத தூதனுக்காக என் தேவனை நன்றி யோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கி றேன்.

வாசகர் கடிதம்

Praise the Lord 02-02-2025

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள Wesley Devadasan அவர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு கி.பி.2025 கால் நூற்றாண்டு வாழ்த்துக்கள் கூறி எழுதிக் கொள்வது என்னவென்றால், கர்த்தருடைய கிருபையால் நாங்கள் நலம். இதே போல் நீங்களும் சுகமாய் இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இதுவரை நம் அனைவரையும் ஊழியப்பாதையில் காத்து அற்புதமாய் வழிநடத்தி வந்த தேவனுக்கு கோடாகோடி துதி, ஸ்தோத்திரம் நன்றிகளை சொல்லுகிறேன். இப்பொழுதும் எனக்கு எழுபது வயதுக்கு மேல் ஆகிறது. Two wheeler வண்டியில் போய் கிராமங்களில் ஊழியம் செய்ய ஆண்டவர் இயேசுகிறிஸ்து உதவி செய்கிறார். விசுவாசத்தில் நடத்துகிறார் ஆமென். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

Pr. P.C.S.

❖ ❖ ❖ ❖

தேவ கிருபையால் 10 குறிப்புகளுக்காக தினந்தோறும் ஜெபிக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் மாதந்தோறும் ஒருகுறிப்பைப் பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்ளுவேன்.

ஜெபக்குறிப்பு 1. ***உங்களுக்காக***

வாசகர் அனைவருக்காகவும் தினந்தோறும் ஜெபிக்கிறேன். நிர்வாக வசதிக்காக, மிக நீண்ட வருடங்களாக மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகளுக்காக, தனியாக டயரி பராமரித்து வருகிறேன். பிற்பாடு ஆண்டுதோறும் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகளுக்காகவும், மேலும் காணிக்கை அனுப்புகிற அனைத்து தேவனுடைய பிள்ளைகளுக்காகவும் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு, உங்கள் அன்பான காணிக்கைகள் பதிவு செய்யப்படுகிறது; ஆகையால் ***உங்களை நினைத்து*** தினந்தோறும் ஜெபிப்பது எனக்கு இலகுவாயிருக்கிறது. இதைக் குறித்து ஒரு வேத பகுதியை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்:

நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி,

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவா ரென்று நம்பி,

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக் கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந் தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

நான் ***உங்களை நினைக்கிற*** பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் பிலிப்பியர் 1:4-6.

ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத் திருங்கள் பிலி. 4:1.

7 விதமான அக்கினி

1. இயற்கையான அக்கினி Natural Fire

அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான் ஆதி.22:7. இதுதான் இயற்கை யான அக்கினி. விறகு அடுப்பு இருக்கும்வரை சமையல் அறையில் அந்த அக்கினிக்கு முன்பாகவே நாம் தினந்தோறும் நின்றோம்.

யாக்கோபு இவ்விதமாக எழுதுகிறார்: அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவை களைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொழுத்தி விடுகிறது!

நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொழுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொழுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! யாக்கோபு 3:5,6.

1. காடுகள் தீப்பற்றி எரிகிறது
2. வீடுகள், கடைகள், வாகனங்கள் தீப்பற்றி எரிகிறது
3. விரோதத்தால் மக்கள் எரிக்கப்படுகிறார்கள்
4. கலவரம் ஏற்படும் போது தீ பற்றியெரிகிறது
5. இரத்த சாட்சிகள் எரிக்கப்பட்டனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

2. அழிக்கும் அக்கினி அல்லது பட்சிக்கும் அக்கினி Consuming Fire

1. அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்த பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் **அழித்துப்** போட்டார் ஆதி. 19:24,25.

2. பின்பு ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது அவருடைய கோபம் மூண்டது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளையத்தின் கடைசியிலிருந்த சிலரைப் **பட்சித்தது** எண்.11:1.

3. அப்பொழுது எலியா, அந்த ஐம்பது பேரின் தலைவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனா னால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பது பேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பது பேரையும் **பட்சித்தது** 2 இராஜா. 1:10.

3. பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி Fire of the alter/ Fire upon the alter

1. லேவி. 6:9ь ...பலிபீடத்தின் மேலுள்ள **அக்கினி** எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.

2. லேவி. 6:12 பலிபீடத்தின் மேலி ருக்கிற **அக்கினி** அவியாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

3. லேவி.6:13 பலிபீடத்தின் மேல் **அக்கினி** எப்பொழுதும் எரிந்து கொண் டிருக்க வேண்டும்.

என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது; நான் தியானிக்கையில் **அக்கினி** மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன் சங். 39:3.

1. பலிபீடத்திலென்னை பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திருஇரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

2. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் சாக
தேவா அருள் செய்குவீர்

4. அந்நிய அக்கினி Strange fire

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூப கலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின் மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத ***அந்நிய அக்கினியை*** அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள்.

அப்பொழுது **அக்கினி** கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; **அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்** லேவி. 10:1,2.

உசியா ராஜாவைப் பற்றி எழுதுவது நமக்கு பிரயோஜனமாயிருக்கும்.

உசியா ராஜாவாகிற போது, பதினாறு வயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; ***...தேவன் அவனுக்குத் துணை நின்றார்.***

அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின்மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான்...

அப்பொழுது உசியா கோபங் கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன் நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று 2 நாளா. 26:1-21.

5. சோதிக்கும் அக்கினி Fire of trial

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்ற தாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப் பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் 1 பேதுரு 1:7.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை எரிகிற அக்கினிச்சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி, தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய புருஷருக்குக் கட்டளையிட்டான் தானியேல் 3:20.

1. வசனம் 21 ... **எரிகிற அக்கினிச் சூளையின்** நடுவிலே போட்டார்கள்.

2. வசனம் 22 ... **அக்கினி ஜுவாலையானது** ... தூக்கிக் கொண்டு போன புருஷரைக் கொன்று போட்டது.

3. வசனம் 23 ... அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் **எரிகிற அக்கினிச் சூளையின்** நடுவே விழுந்தார்கள்.

4. வசனம் 24 ... மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக **அக்கினியிலே** போடுவித்தோம் என்றான்.

5. வசனம் 25 ... இதோ, நாலுபேர் விடுதலையாய் **அக்கினியின்** நடுவிலே உலாவுவதைக் காண்கிறேன்... என்றான்.

6. வசனம் 26 அப்பொழுது நேபுகாத் நேச்சார் எரிகிற **அக்கினிச் சூளையின்** வாசலண்டைக்கு வந்து, ... நீங்கள் வெளியே வாருங்கள் என்றான்;

7. வசனம் 27 ... **அக்கினி** பெலஞ் செய்யாமலும்,... **அக்கினியின் மணம்** அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.

ஏசாயா 43:1,2

இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: **பயப்படாதே;** உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.

நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளவதில்லை; நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது.

சிங்க கெபியில் நான் விழுந்தேன்
அவர் என்னோடு அமர்ந்திருந்தார்
சுட்டெரிக்கும் அக்கினியில் நடந்தேன்
பனித்துளியாய் என்னை நனைத்தார்

சிங்க கெபியோ சூளை நெருப்போ
அவர் என்னை காத்திடுவார் -2
அவரே என்னை காப்பவர்
அவரே என்னை காண்பவர் -2
சிங்க கெபியோ சூளை நெருப்போ
அவர் என்னை காத்திடுவார் -2

1. எதிரிகள் என்னை சுற்றி வந்தாலும்
தூதர் சேனைகள் கொண்டென்னை
காப்பாரே-2
ஆவியினால் யுத்தம் வெல்வேனே
சாத்தானை சமுத்திரம் விழுங்குமே -2

2. இராஜ்ஜியம் எனக்குள்ளே வந்ததால்
சூழ்ச்சிகள் எனை ஒன்றும் செய்யாதே -2
அற்புதம் எனக்காக செய்பவர்
என்னை அதிசயமாய் வழி நடத்துவார் -2

6. பாதாள அக்கினி / நித்திய அக்கினி Fire of Hell/Everlasting fire

அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப் பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக் காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார்.

அந்தப்படி, இவர்கள் ***நித்திய ஆக்கினையை*** அடையவும், நீதிமான்களோ ***நித்திய ஜீவனை*** அடையவும் போவார்கள் என்றார் மத்தேயு 25:41-46.

இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர் தேவனை ஆரவாரத்தோடு ஆராதிக்கும் பரவசத்தில் லயித்துப்போய் இருப்பதால், பாவத்தில் மரிப்பவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களே என்ற சிந்தையின்றி வாழ்கிறார்கள் வெளி. 21:8.

ஆம், நாம் வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், பாவிகள் பாதாளத்திற்குள் விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் ஜான் R.ரைஸ் என்ற பிரசித்திப் பெற்ற தேவ ஊழியர் இவ்வாறு எழுதுகிறார்:

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நரகமாகிய உண்மை

உலகத்திலேயே மிகவும் கொடூரமானதிடமான சத்தியம் நரகமே. வேதம், நரகத்தின் உபதேசத்தை சந்தேகத்திற்கிடமின்றி கூறுகிறது. யாருமே பேசாதது போல பேசிய, சாந்தமும் மனத்தாழ்மையுமான, மன்னிக்கும், சுகப்படுத்தும், ஆறுதல் படுத்தும் இயேசுவே மறுபடியும் மறுபடியுமாக நரகம் என்ற இடத்தைக் குறிப்பிட்டார். இதைக்குறித்து வேதத்தில் அதிர்ச்சி தரக்கூடியத் தகவல்கள் இவரது உதடுகளிலிருந்தே பொழியப்பட்டன.

நரகத்தில் புழு சாவதுமில்லை அக்கினி அவிவதுமில்லை என்று கூறியது இயேசுவே மாற்கு 9:43-48.

ஆத்துமாவும் உடலுமாக நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றது இயேசுவே மத்தேயு 10:28.

ஜீவாலைகளில் புழுவாய்த் துடித்துக் கொண்டு வேதனையினால் தனது கண்களை ஏறெடுத்து தனது நாவு நனையும்படியாக ஒரு சொட்டு குளிர் நீருக்காய் கெஞ்சிய அந்த நாசமாக்கப் பட்டப் பணக்காரனின் **கதறல்களை நாம் கேட்கும்படியாக நரகத்தின் மூடியைத் திறந்து காட்டினவர் இயேசுவே!**

பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிற போது, தன்கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; **இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே** என்று கூப்பிட்டான் லூக்கா 16:23,24.

விசுவாசியே, தேவனுடைய பிள்ளையே, இந்த கதறல் உங்களுடைய காதுகளில் விழுகிறதா?

நரக வழி செல்லும் மாந்தர்க்காய்
நடு இராப்பகல் அழுதே
நம் தலை தண்ணீராய் கண்கள் கண்ணீராய்
நனைந்து வருந்தி ஜெபிப்போம்

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப் போகும் அழிவை பார்த்த போது, அவர் நகரத்திற்காய் அழுதார். நம்மில் சிலர் ஜெபத்தின் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நம் நாட்டின் மீது வரும் தேவனின் தண்டனை தள்ளி வைக்கப்படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய்தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக்குண்டா?

7. பரிசுத்த அக்கினி/ பரலோக அக்கினி Fire of the LORD / Fire from heaven

"*எழுப்புதல் தாமதிப்பது ஏன்?*" என்ற புத்தகத்தை எழுதிய தேவ மனிதன் *லீயோனார்டு ரேவன்ஹில்* இவ்வாறு எழுதியிருக்கிறார்:

"இதை வாசிக்கும் நண்பரே, பரிசுத்த ஆவியின் அக்கினியை சபை இழந்து விட்டதினால்தான் மனிதர் பாதாள அக்கினிக்கு செல்கின்றனர்".

சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: *ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்* என்றான் லூக்கா 5:8.

when Simon Peter saw it, he fell down at Jesus' knees, saying, Depart from me; for I am a sinful man, O Lord.

இந்த மனிதனைக் கொண்டுதான் உலகம் கண்டிராத ஊழியத்தை நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து செய்தார்.

1. அப்.2:41 அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய **மூவாயிரம்** பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

2. அப்.4:4 வசனத்தைக் கேட்டவர்களில்அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய **ஐயாயிரமாயிருந்தது.**

3. அப். 5:14 **திரளான** புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப் பட்டார்கள்.

4. அப்.5:15,16 பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள். ..... **அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.**

5. அப். 3:5-7 அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;

வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கி விட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது.

அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.

6. அப். 9:40 பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்காற் படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது **அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவை பார்த்து உட்கார்ந்தாள்.**

7. அப்.10.44-46 இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் **யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.**

அவர்கள்பல பாஷைகளைப்பேசுகிறதையும், தேவனைப்புகழுகிறதையும்,

பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப் பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.

காரணம் என்ன?

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள்.

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் அப். 2:1-4.

கடைசி நாட்களில் அல்ல, கடைசி மணி நேரங்களில் வாழும் நமக்கு, பரிசுத்த ஆவியானவரும், பரலோக அக்கினியும் அவசியம் அல்லவா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)
அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

❖ ❖ ❖

பரலோக நதியே பரிசுத்த நதியே
இறங்கி வர வேண்டும்

1. நாற்பது நாளாய் இடைவிடாமல்
தண்ணீர் பெருக செய்தீர்
உம் பாதம் தேடி ஓடி வந்தேன்
அபிஷேகம் பெருகச் செய்யும்

2. ஏதேனிலிருந்து நான்கு திசைக்கும்
நதிகள் பாயச் செய்தீர்
என்னில் இருந்து தேசமெங்கும்
நதிகள் பாயச் செய்யும்

3. எழுப்புதல் காண எங்கள் உள்ளம்
ஏங்கித் தவிக்குதையா
பாலைவனத்தை சோலை ஆக்க
என்னைத் தந்தேன் ஐயா

4. மன்றாட்டு ஜெபத்தால் மலைகள் நொறுங்க
அக்கினி இறங்க வேண்டும்
பின்வாங்கிப் போன மக்களெல்லாம்
உம்மிடம் திரும்ப வேண்டும்.

பொருளாதார ஆசீர்வாதங்களையும் உடலுக்கடுத்த நன்மைகளையுமே பிரதானமாய்க் கொண்டுள்ள நவீன உபதேசம் ஒரு கொள்ளை நோய் போலக் கிறிஸ்தவத்தில் பரவியுள்ளது (பிலி. 3:17-19).

"இது வேறொரு சுவிசேஷம்."

கிறிஸ்து என்னில் வாழுகிறார்!

Christ living in me!

Andrew Murray

தேவன் விரும்புகிறபடி நாம் வாழ கிறிஸ்து எப்படி நமக்கு உதவி செய்கிறார்? அடிக்கடி நாம் கிறிஸ்துவை நம்மிலிருந்து பிரித்து தனிப்பட்ட நபராக இருந்து கொண்டு நம்முடைய ஜெபங்களைக் கேட்டு உதவி செய்கிறவராக எண்ணுகி றோம்.இயேசு தாமே திராட்சச் செடியும் கொடிகளும் என்ற உவமையில் கிறிஸ்து நம்மில் வாழ்வதைக் குறித்துக் குறிப்பிடு கிறார். "**நானே திராட்சச்செடி; நீங்கள் கொடிகள்**" *(யோவான் 15:5)*. திராட்சச் செடியையும் கொடியையும் விட எது மிக நெருக்கமா யிருக்க முடியும்? இதே விதமான வாழ்வும் ஆவியும் கிறிஸ்துவிலிருப்பது போல நம்மிலுமிருக்க வேண்டும்.

இரட்சகர் நம்மில் வாசம் பண்ணு வதை நான் விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்து பரலோகத்திலிருப் பது போலவே இங்கே என்னிலுமிருக்கிறார் என்பதை நான் அறிய வேண்டும். அவர் என் வாழ்வின் ஆழமான பகுதியில் வருகிறார். உள்ளே வாசம் பண்ணுகிற அவர், ஒரு தேவ பிள்ளையாக நான் வாழும்படி உதவி செய்கிறார். சர்வ வல்ல தேவன் ஒருவரே செயல்படக் கூடிய வல்லமையோடு எனது சித்தத் திலும் சிந்தனையிலும் உணர்ச்சியிலும், வாழ்விலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இதை நான் புரிந்து கொள்ளும் போது எனது ஆத்துமா மிகுந்த மரியாதை யுடனும் நம்பிக்கையுடனும் தேவனுக்கு முன்பாக பணிந்து குனிகிறது. நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் வாழுகிறேன். ஆனால் என்னில் வாழும் கிறிஸ்து என்னுடைய வாழ்வின் உண்மையான ஜீவனாயிருக்கிறார். வேதவசனம் அழகாக இவ்வாறு அதைக் குறிப்பிடுகிறது: "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" கலா.2:20.

வாருங்கள்! ஜீவிக்கிற கிறிஸ்து உங்களில் வாழட்டும்! அவர் வைத்துப் போயிருக்கிற முன்மாதிரியான வாழ்வை அறிந்து கொள்ள நாடுங்கள். கிறிஸ்து வைப் போல நடிக்க வேண்டாம். அவர் நமக்காக வாழ்ந்து, அவ்வாழ்வை நம்மோடு பகிர்ந்து கொள்வதால் அவரது வாழ்வை நாம் பகிர்ந்து கொள்ள முடியும். ஜீவனுள்ள கிறிஸ்து எனது வாழ்வை சொந்தமாக்கிக் கொள்ள எனது சித்தமும் விருப்பமுமிருந்தால் அவர் நடந்தது போலவே நானும் நடக்க முடியும்.

தேவன் மேல் சார்பு

வேத வாக்கியங்களில் எழுதப்பட்டி ருப்பது போல கிறிஸ்துவின் வாழ்வோடு நெருக்கமாயிருந்து அதை உற்று நோக் குங்கள். அவருடைய வாழ்வின் மிகப் பெரிய அடையாளம் அவரது ஆழமான தாழ்மையும் பரம தந்தை மேல் இருந்த அவரது சார்புமே. அவர், "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை" *(யோவா. 5:30)* என்று கூறியிருக்கிறார். எல்லாவற்றிலும் அவருடைய வாழ்வு தேவனிடத்திலிருந்தே வந்தது.

கிறிஸ்துவின் உலக ஊழியத்தில் ஆரம்பம் முதல் இறுதி மட்டும் பிதாவே அவருக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமா யிருந்தார். தேவனை எல்லாவற்றிலும் கனப்படுத்திய கிறிஸ்து என்னில் வாழ்வ தாயிருந்தால் அதை நான் புரிந்து கொண் டால் அதே விதமாக என்னிலும் அவர் செயலாற்றுவார்.

அவரது வாழ்வு தேவனிடமிருந்து பெறப்பட்டது என்பதை அவர் ஒப்புக் கொண்டார். "பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து, எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்" யோவா. *3:35*. மேலும் அவர் கூறியிருப் பது: குமாரனும் தம்மில் தானே ஜீவனு டையவராயிருக்கும்படி அருள் செய்தி ருக்கிறார் (பிதாவானவர்) யோவா. *5:26*. அதுவே கிறிஸ்துவின் ஆரம்பப்புள்ளி. "எனது ஜீவன் தேவனிடமிருந்து வருகிறது. நான் தேவனிடமிருந்து வருகிறேன். என்னில் ஒன்றுமேயில்லை, எதை நான் பெற்றுக் கொள்ள வேண்டு மானாலும் அதை நான் தேவனிட மிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்".

கிறிஸ்து அந்த நிலையை எடுத்துக் கொண்டால் நாமும் அதையே செய்ய வேண்டுமே. ஆழமான உத்தமத்தோடு "இந்தப் புதிய வாழ்வை நான் தேவனிட மிருந்து பெற்றுக்கொண்டேன். அவர் அதனை எனக்குக் கொடுத்தார். தேவன் எனக்குக் கொடுத்த பணி என் இருதயத் திலிருக்கிறது. அது தூய ஆவியின் மறு பிறப்பால் ஏற்பட்டது. தேவனிடமிருந்து ஒரு புது வாழ்வை நான் பெற்றிருக்கி றேன்" என்று சொல்வோமா?

தேவன் கொடுத்த வாழ்வு எத்த கையது? அதை நல்ல நிலையில் கவனிக்கப் போவது யார்? அவர் தொடங் கியதை அவர்தான் காப்பாற்ற வேண்டும். அவர்தான் அதனை முழுமைப்படுத்த வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்வின் உயரிய பண்பு தேவன் தமது விருப்பத்தின்படி செயல் பட அனுமதிப்பதே. தேவன் அவரது பணியை நம்மில் நிறைவேற்ற அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் அவரையே முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும். நாம் இந்தப் பாடத்தை கற்றுக்கொள்வது அவசியம். "தேவனே, நான் ஒன்றுமில்லை! எனக்கு எதுவுமே தெரியாது. நான் வெறுமையானவன். தேவன் உதவி செய்தால் மட்டும் நான் எதையும் செய்யக் கூடும்" என்று ஜெபிக்க வேண்டும்.

தேவனிடம் கிறிஸ்து என்னை எப்படிக் கொண்டுவர முடியும்? அவர் தாமே வந்த வழியைத் தவிர வேறு எந்த வழியிலும் அவர் என்னைத் தேவனிடம் கொண்டுவர முடியாது. அது எந்த வழி? அந்த வழி ஆழமான சுயவெறுப்பும் தேவனுக்காக நம்மை அர்ப்பணிப்பது மாகும். அவர் எப்போதுமே பிதாவாகிய தேவன் அவரில் கிரியை செய்ய எதிர் பார்த்தார். பெலனுக்காக அவர் அவரை நோக்கிப் பார்த்தார். நடத்துதலுக்காக அவரை நோக்கி ஜெபித்தார். அவரது குழப்பத்தில் தேவனை நோக்கிக் கதறி னார். தேவனே அவருக்கு எல்லாவற்றிற் கும் எல்லாமாயிருந்தார். தாம் வெறுமை யாயிருப்பதில் திருப்தியாயிருந்தார். கிறிஸ்துவின் வல்லமை நம்மில் வெளிப் பட தேவன் மேலேயே சார்ந்து வாழும் வாழ்வு வேண்டும். அதனை தேவன் நமக்குத் தரும்படி ஜெபிப்போம்.

கிறிஸ்துவின் மரணத்தில் இணைக்கப்படுதல்

தேவன் மேல் சார்ந்திருப்பதைக் குறித்து கிறிஸ்துவின் மரணம் நமக்கு என்ன போதிக்கிறது? தேவன் அவருக்குக் கொடுத்த ஜீவனை அவர் முற்றிலுமாக அவருக்கே அளித்து விட்டார். "நான் என் ஜீவனை என்னுடையதாக நான் கருத வில்லை" என அவர் கூறினார். "எவ்வளவு பாடுகளாயினும், அதிக வெட்கமாயினும், மரண வேதனை யானாலும் பிதா விரும்பினால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்ல வேண்டும். அது நல்லதும் சரியானதுமாகும். என்னிடமுள்ளவற்றை நான் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டால் அவற்றை நான் திரும்பக் கொடுக்கவும் வேண்டும்.

அது கிறிஸ்துவின் வாழ்வில் உண்மையாயிருந்தது. அவர் பன்னி ரெண்டு வயதாயிருந்த போதே தாயாகிய மரியாளிடம் "என் பிதாவுக்கடுத்தவை களில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்றார் லூக். *2:49*. பின் நாட்களில் "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத் தின்படி செய்யவே நான் வானத்தி லிருந்து இறங்கி வந்தேன்" *(யோவா. 6:38)* என்றார். கெத்செமெனே தோட்டத்தில் வேதனையோடு ஜெபித்த போதும், "ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படி யல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" *(லூக். 22:42)* என்று வாசிக்கிறோம்.

விசுவாசிகளாக நாம் ஒருபோதும் தேவனிடமுள்ள உரிமைகளை ஒத்துக் கொள்ளுகிறதில்லை. எனது முழு வாழ்வும் அவரிடமிருந்தே வருகிறது. எனது ஒவ்வொரு வினாடியும் நான் அவருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் நான் பெற்றுக்கொள்ளுகிற அனைத்து பெலனும் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவை மறுபடியும் அவரிடத்திற்கே திரும்பிச் செல்ல வேண்டும். எனவே அனைத்து செயல் பாடுகளும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

ஒருவனுக்குள் கிறிஸ்து இருந்தால் அவன் உண்மையான பரிசுத்தவானும், முழுமையாகத் தன்னை தேவனுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக் கொடுத்தவனுமாயிருக்கிறான். அது எளிதானதல்ல. ஏன், நம்மிலுள்ள சுயம் உறுதியாயிருக்கிறது. பாவம் நம்மை அந்த பயங்கரமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. நம்மை வெறுமை என்றெண்ணுவதும் தேவனுடைய சித்தம் செய்வதும் ஆகியவை கனமானதும் ஒரு வாய்ப்பும் என்று எண்ணுவதற்குப் பதிலாக இதைக் கடினம் என்று எண்ணினோம். ஆயினும் ஒருவர் தன்னை தனது சுயத்தை விட்டு விட்டு தேவனுக்குத்தன்னை அர்ப்பணித்தால் அவர் கிறிஸ்து தன்னில் வாழும் அனுபவத்தைப் பெறமுடியும்.

"நான் உன்னில் வாழ்வதை நீ விரும்பினால், நான் செய்ததை நீயும் செய்ய வேண்டும். உனது வாழ்வு மரணத்துக்கு அதாவது சிலுவையின் மரணம் வரை ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும்". நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் மரணத்துக்குப் பங்காளிகளாக வேண்டும். எனவே தேவனுடைய வசனம், "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" *(ரோமர் 6:5)* என்று கூறுகிறது.

எனவே ஒரு கிறிஸ்தவனாக தேவனிடம் இப்படிச் சொல்ல வேண்டும்: "என் ஜீவனை இழந்து போக விரும்புகிறேன். சுயத்துக்கு மரிக்க விரும்புகிறேன். கிறிஸ்து எனக்குள் அவரது மரணத்தோடு வந்து என்னை அதற்குள் இறங்கச் செய்து அதன் மூலம் என்னில் வாழட்டும்".

உயிர்த்தெழுதலின் வாழ்வு

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அடுத்தபடி. கிறிஸ்து தனது ஜீவனைக் கொடுத்த போது தேவன் அதனை அதிக மகிமையுடன் திரும்ப அளித்தார். அவர் கல்லறைக்குள் சென்ற பின்பு தேவன் அவரை எழுப்பி ஒரு புது ஜீவனை அளித்தார். அது எட்டாத உயரமானதும் அவர் கொடுத்ததை விட உயரியதும் நல்லதுமான வாழ்வாகும்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இதை எனக்குப் போதிக்கிறது. எனது தீமையான வாழ்வையும், தீமையான சித்தத்தையும், இருதயத்தையும் அதன் ஆசைகளையும் இவ்வுலகில் என் வலிமையையும் எல்லாவற்றையும் தேவனுக்காகக் கொடுத்தால், தேவன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் புதிய வாழ்வை பூமியில் என் இருதயத்தில் தருவார். ஜீவனுள்ளவராகிய அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டதால் வந்து என் இருதயத்தில் வாழுவார்.

கிறிஸ்துவின் கல்லறையைக் குறித்துக் கற்றுக் கொள்ளுங்கள். அதின் கருத்து என்ன? அவர் தம்மை மரணம் வரை ஒப்புக் கொடுத்தார். அவர் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லாதவராகவும் உதவியற்றவராகவும் இருந்தார். தேவன் தமது வேளையில் தமது பணியை நிறைவேற்ற தம்மை ஒப்புக் கொடுத்தார்.

தேவன் என்ன செய்தார்? அவர் தமது வாக்குத்தத்தத்தினை நிறைவேற்றி, கல்வாரிக்கு முந்தின வாழ்வை விட ஆயிரம் மடங்கு மகிமை நிறைந்த வாழ்வை அளித்தார். கிறிஸ்து உங்களில் வாழ விரும்பினால் கல்லறைக்குள் இறங்கிய அவரை விரும்ப வேண்டும். அவரது உயிர்த்தெழுந்த வாழ்வுடன் அவர் உங்களில் வர விரும்ப வேண்டும். அவர் உங்களோடு ஒன்றிணைய வேண்டும். அவர் மரித்து சதாகாலங்களிலும் உயிரோடிருப்பவர். அவர்தான் நம்மில் வந்து அவரது வலிமையை எனக்குள் தந்து அதன் மூலம் சுயத்துக்கும் பாவத்துக்கும் மரிக்கவும், அவரது வாழ்வின் வலிமை நமக்கு அளிக்கப்பட வேண்டும். இயேசுவின் பிரசன்னத்தின் நினைவுகளால் மட்டும் திருப்தியடைய வேண்டாம். அவரது வரவு ஒரு நிஜமாயிருக்கட்டும். அவரது சமுகம் ஜீவனுள்ளதாயிருக்கட்டும்.

நிறைவான வாழ்வு

உயிர்த்தெழுதலுக்குப் பின் கிறிஸ்து பரத்துக்கு எழுந்தருளிப் போனார். தேவன் அவரை வல்லமை நிறைந்த இடத்திற்குள் தமது மகிமையின் சிங்காசனத்திற்குப் பங்காளியாக தெய்வீக வல்லமையின் பங்காளியாக பரத்துக்குள் எடுத்துக் கொண்டார். அவர் அங்கிருந்து தூய ஆவியானவரை அனுப்பியிருக்கிறார்.

அனேகர் இப்படிக் கேட்கிறார்கள்: நான் எனது உடன் மனிதருக்கு எப்படி ஆசீர்வாதமாயிருக்க முடியும்? கிறிஸ்து எப்படி உலகிற்கு ஆசீர்வாதமாயிருந்தார்? அவர் தம்மை தேவனுக்கு அளித்து விட்டார், தாமே மரித்தார். தனது இயற்கை வாழ்வுக்கு மரித்து தேவன் அவரை எழுப்பும்படி காத்திருந்தார்.

"கிறிஸ்தவர்கள் ஏன் பெலவீனமாயிருக்கிறார்கள்?" என்பது சபையில் எழும்பும் கேள்வி. இன்னும் அனேகரது கேள்வியாயிருக்கிறது. கிறிஸ்து வாக்களித்தது போல பூரண கிறிஸ்தவ வாழ்வுக்காக நாம் என்ன செய்ய வேண்டும்? பிதா நம்மை திராட்சச் செடியின் மெய்யான திராட்சக் கொடிகளாக மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவது நாம் கிறிஸ்துவைப் பார்த்து நம்மிடம் கேள்வி கேட்க வேண்டும். "கிறிஸ்து என்னில் வாழ எல்லாவற்றையும் விட்டுவிட நான் விரும்புகிறேனா?". எத்தனை பேர், "ஆம் கர்த்தாவே, கிறிஸ்து என்னை சொந்தமாக்கிக் கொள்ள எதையும் விட்டுவிட நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று சொல்லுவோம்.

நான் இரட்சிக்கப்பட்டு பாவ மன்னிப்பு அடைந்துவிட்டேன் என்று அரைமனதோடு திருப்தி கொள்ள வேண்டாம். என்னிடம் சிறிதளவு கிறிஸ்து உண்டு. நான் என்னாலியன்ற வரை நன்றாயிருக்கிறேன். இது போதாது. தேவன் அளிக்கும் முழுமையான வாழ்வை பெற்றுக் கொள்ளுங்கள். தாழ்மையும், கீழ்ப்படிதலும், பாடுகள் நிறைந்து பிதாவைச் சார்ந்து வாழ்ந்த கிறிஸ்து உங்களில் வரட்டும். "அதுவே கிறிஸ்து என்னில் வாழும் வாழ்வு".

கிறிஸ்துவே நமது ஜீவன்

Christ is Our Life

Rich Carmicheal

ஆண்டவராகிய இயேசு உங்கள் வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்துவாராக. அது மிகவும் உண்மையானது. உங்கள் வாழ்வு எந்த நிலையில், எந்த சூழ்நிலையிலிருந்தாலும் இயேசு அவ்விடத்தில் உங்களை சந்தித்து உங்கள் வாழ்வின் மூலம் அதிசயங்களைச் செய்யக் கூடும். ஏன் நாம் நமது நம்பிக்கையையும் உறுதியையும் மிகக் கடினமான காலங்களிலும் வைக்க முடியும் என்பதற்கான சில காரணங்களை சிந்திப்போம்.

1. அவரது ஆளத்துவம், அவரது பணி மற்றும் ஆதாரங்கள் யாவும் எல்லாவற்றையும் உள் அடக்கியவை

நமது ஆண்டவராகிய இயேசுவின் மகிமை, பண்புகள், இயற்கை, ஊழியம், திறமை எல்லாம் நாம் முழுவதும் அறிந்து கொள்ள முடியாதவை. வேத புத்தகமும், விசுவாசிகளாக நமது அனுபவங்களும் அவர் அதிசயமாகக் கிரியை நடப்பிக்கிறவர் என்று தெரிவிக்கின்றன. உதாரணமாக அவர் ஆதியும் அந்தமுமானவர் அல்பா ஒமேகா என்று நமக்குத் தெரியும் *(வெளி.1:8)*, ஜீவ அப்பம் *(யோவா.6:35)*, இரட்சிப்பின் தலைவர் *(எபி.2:10)*, விடுதலையாளர் *(ரோமர் 11:26)*, நித்திய பிதா *(ஏசா.9:6)*, ஆதியும் அந்தமுமானவர் *(வெளி.1:17)*, நல்ல மேய்ப்பர் *(யோவா.10:11)*, சபைக்குத் தலையானவர் *(எபேசி.1:22)* இருக்கிற வராகவே இருக்கிறவர் *(யோவா.8:58)*, உலகின் ஒளி *(யோவா.8:12)*, கர்த்தாதி கர்த்தர் *(அப்.10:36)*, வல்லமையுள்ள தேவன் *(ஏசா.9:6)*, சமாதானப் பிரபு *(ஏசா.9:6)*, உயிர்த்தெழுதலும் ஜீவனும் *(யோவா.11:25)*, கன்மலை *(1கொரி.10:4)*, இரட்சகர் *(லூக்.2:11)*, தேவகுமாரன் *(மத்.2:15)*, மெய்யான திராட்சச்செடி *(யோவா.15:1)* மற்றும் தேவனுடைய வார்த்தை *(வெளி.9:13)*.

இன்னும் அனேக பெயர்களையும் விளக்கங்களையும் கிறிஸ்துவைக் குறித்துக் கூறலாம். ஆனால் இவை மட்டுமே அவரது மகிமையையும் வல்லமையையும் வெளிப்படுத்தக் கூடும். அவர் யார் என்பதையும் அவர் எதைச் செய்யக் கூடும் என்பதையும் அளவிட்டுக் கூறமுடியாது. அவரில் இரட்சிப்பு, விடுதலை, சுயாதீனம், மன்னிப்பு, சந்தோஷம், சுகம், ஆதாரங்கள், பாதுகாவல், ஞானம், உற்சாகம், ஆறுதல், பெலன், வல்லமை என எவ்வளவோ இருக்கின்றன. "நமது தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படியே உங்கள் குறைவுகளையெல்லாம் கிறிஸ்து

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இயேசுவுக்குள் மகிமையிலே நிறை வாக்குவார்" பிலிப். 4:19.

2. அவர் நம்மோடு எப்போதும் இருக்க வாக்குப் பண்ணி, உண்மையாக நம்மில் வாசம் பண்ணுகிறார்!

இந்த சத்தியத்தை மனதிற் கொண்டு மேலே கூறப்பட்ட பெயர்களை மீண்டும் படியுங்கள். இதுவே நம்மோடும் நமக்குள்ளும் இருக்கும் கிறிஸ்து. அவரது பிரசன்னம், வல்லமை, அன்பு, ஜீவன், கிருபை இன்னும் பலவற்றால் நம்மோடு கிரியை செய்வ தால் நாம் எல்லாவற்றையும் மேற் கொள்ளவும், சகிக்கவும், அவருடைய நோக்கத்திற்கேற்ப எல்லாவற்றையும் நிறைவேற்றவும் முடியும். "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலிப். 4:13. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" எபி. 13:6.

3. அவர் நமக்குமானவர்!

இயேசு நம்மை உருவாக்கினவர் மட்டுமல்ல, அவரது விலையேறப் பெற்ற இரத்தத்தால் நம்மை மீட்டவரும் கூட. நாம் அவருக்குச் சொந்தமான வர்கள்! அவர் நம்மை நன்கு அறிந்து அதிகமாக விசாரிக்கிறவர். நாம் மிக நல்ல நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் அவரது ஜீவனையும் வெற்றியையும் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறார். அவர் நமது சோதனைகளையெல்லாம் அறிந்து அவற்றின் மூலம் நமக்கு நன்மை செய்வதோடு, நம்மை நிலைநிறுத்தி அவற்றில் கடந்து வரவும் உதவி செய்கிறார். அவர் இரக்கமும் உத்தமமு மான பிரதான ஆசாரியர். எனவே நமது பெலவீனங்களில் நமக்காக பரிதபித்து இரட்சிக்கிறார். அவர் எப்போதும் நம்மோடு ஜீவித்து நமக்காக மன்றாட்டு செய்பவர் எபி. 2:17; 4:15; 7:25.

அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் ஆகியவற்றை நாம் அறிவது அவசியம். "...கிறிஸ்துவி னுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து..." எபேசி.3:18,19. "இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களா னாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வா னாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக் கிறேன்" ரோமர் 8:37-39.

4. கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததி னாலே, நாமும் பாவத்திற்கும் சுயத்திற்கும் மரித்து ஒரு புதிய வாழ்வை வாழலாம்

இந்தப் பெரிய சத்தியம் வாழ்வை மாற்றியமைக்கக்கூடியது. அதற்காக அதை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தின் மூலம் நமது வாழ்வில் கிரியை செய்ய அதனை அனுமதிக்க வேண்டும். நமது ஆவிக்குரிய வாழ்வின் திறவுகோல் கிறிஸ்துவே. குறிப்பிட்டுச் சொன்னால் கிறிஸ்துவே நமது ஜீவன் (கொலோ. 3:4), அவரே வழியும் சத்தியமும் ஜீவனு மானவர் (யோவா. 14:6), நம்மிலும் நம்மாலும் பாவத்திற்கும் சுயத்திற்கும் மரிக்கும் திறன் இல்லை. ஆனால் கிறிஸ்துவுடன் இணையும் போது, அவருடைய மரணத்தின் சாயலிலே (ரோமர் 6:5) நாம் பாவத்திற்கும் சுயத் திற்கும் சாக முடியும். "... ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத் திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தா ரென்றும் நிதானிக்கிறோம்... இப்படி யிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந் தால், புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின்" 2 கொரி. 5:14-17. "நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழு தோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப் பட்டிருக்கிறீர்கள்" 1 பேதுரு 2:24,25.

நமது பிரதிவினை

இந்த அற்புத சத்தியங்களின் வெளிச்சத்தில், நமது பிரதிவினை எப்படி யிருக்க வேண்டும்? நாம் அவரை நமது ஜீவனாக இருக்கும்படி சம்மதிக்க வேண்டாமா? நமது எல்லா உடைமை களையும் அவருக்கு அளித்து, நமது வாழ்வின் முழுமையான ஆட்சியையும் அவரிடம் ஒப்படைக்க வேண்டாமா? நம்மை அவராலே - அவரது மகிமை, ஜீவன், அன்பு, சமாதானம், நீதி, சந்தோஷம் போன்றவற்றால் நிரப்பும்படி கேட்க வேண்டாமா? யோவான் ஸ்நாப கனைப் போல கிறிஸ்து பெருகவும் நாம் சிறுகவும் விரும்ப வேண்டும் யோவா.3:30. இதற்காக நாம் பாவத்திற்கும் சுயத் திற்கும் மரிக்க வேண்டும். கிறிஸ்து வோடு சிலுவையில் அறையப்பட்டு விட வேண்டும். இனி நாம் வாழக்கூடாது (கலா. 2:20). இது முரண்பாடானது, ஆனால் உண்மையாக இப்படி நாம் வாழ ஆரம்பிக்க நமது வாழ்வை விட்டுவிட்டு கிறிஸ்துவின் வாழ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு சொல்லுகிறபடி "... ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன், **தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்** " மத். 16:24,25.

கிறிஸ்துவின் மரணத்தோடு உங்களை இணைத்து கொள்ளுங்கள். அவரது மரணம் உங்களிலுள்ள பாவத்தை அழிக்கட்டும். மன்னியாமை, அசுத்தம், பொய்கள், மாய்மாலம், கோபம் அல்லது எந்த மாம்சத்தின் கிரியையும் அது சாகடிக்கட்டும். அவரோடும் அவரது மரணத்தோடும் இணைந்து கொள்வதால் உங்களிலுள்ள சுயம் சாகட்டும். சுயத்தால் வரும் சுய பரிதாபம், சுய நீதி, சுய மையம், சுய தீர்ப்பு, சுய திருப்தி மற்றும் சுய உணர்வு போன்றவை சாகட்டும். மீண்டும் எல்லா வற்றையும் கிறிஸ்துவுக்கே முற்றிலுமாய் அளித்து விடுங்கள். உங்கள் வாழ்வை அவர் முற்றிலும் நிரப்பி அவரே வாழ அனுமதியுங்கள். அவரது நபரத்துவம், குணாதிசயம், வார்த்தை மற்றும் அவரது நாமத்தின் வல்லமையால் வாழுங்கள். உங்கள் சொந்த அற்ப வாழ்வை இழந்து விட்டு அவரில் மட்டுமே காணும் நிறைவும் பூரணமுமான வாழ்வை மட்டுமே வாழ ஆரம்பியுங்கள்!

உங்களிடம் கவலை, பயம் போன்ற ஏதேனும் இருக்கிறதா? எல்லாவற் றையும் கிறிஸ்துவிடம் கொடுத்து விடுங்கள். அவரது மரணத்திலும் உயிர்த் தெழுதலிலும் நீங்கள் இணைந்து விட்டால் உங்கள் வாழ்வு உங்களுடைய தல்ல, ஆனால் அவருடையது. உங்களை நேசித்து தமது ஜீவனைக் கொடுத்த (கலா.2:20) தேவ குமாரனிலுள்ள விசுவாசத்தில் ஒவ்வொரு நாளும் வாழுங்கள். உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். அவருடைய அற்புதமான வாக்குத்தத்தங்களை மனதில் கொள் ளுங்கள். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக் கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும் பயப் படாமலும் இருப்பதாக" யோவா. 14:27.

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற வர்களே, நீங்கள் எல்லாரும் என்னி டத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்; நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கி றேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள் ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்து மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகு வாயும் இருக்கிறது என்றார்" மத்.11:28-30. "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷ மாயிருங்கள்; சந்தோஷமாயிருங்க ளென்று மறுபடியும் சொல்லுகிறேன், உங்கள் சாந்தகுணம் எல்லாருக்கும் தெரிந்திருப்பதாக, கர்த்தர் சமீபமாயிருக் கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள், அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாகக் காத்துக்கொள்ளும்" பிலி.4:4-7.

எதிரிடையில் கிறிஸ்து

கடைசியாக ஒரு வார்த்தை. ஒரு வேளை நீங்கள் ஒரு கடினமான சூழலில் நம்பிக்கையற்ற நிலையில் இருக்கலாம். இத்தகைய மிகுந்த சோதனை காலங் களில் மிகப்பெரிய காரியங்களை தேவன் செய்யக்கூடியவர். எடுத்துக்காட்டாக, அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்வில், 'ஒரு முள் கொடுக்கப் பட்டிருந்தது'. அது மிகக் கடூரமாயிருந்த படியால் அவர் மூன்று முறை அது நீங்கும்படி ஜெபித்தார் 2 கொரி. 12:7,8. இந்த சூழலை விட கிறிஸ்துவும் அவருடைய கிருபையும் மேலானது, போதுமானது என்று கண்டு கொண்டார். எனவே பவுல் இவ்வாறு கூறுகிறார்: "அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகை யால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகை யால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகி றேன்" 2 கொரி. 12:9-10. சோதனைகளின் பொழுதுகள் உண்மையாகவே ஆசீர்வா தங்களாக மாறி விடுகின்றன. ஏனெனில் அவ்வேளைகளில் கிறிஸ்துவின் கிருபை, வலிமை, சமுகம் இவை அதிகமாகக் கிடைக்கின்றன.

அறிவிப்புகள்

❑ **வருகையின் தூதன்** ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கை யினாலும் தாங்குங்கள்.

❑ **வங்கி வழியாக** (Net Banking) **காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு** Phone **பண்ணுங்கள் அல்லது** SMS or Whatsapp **அனுப்புங்கள்.**

❑ Cell :**95432 21008** Whatsapp :**9489740295**

அவர் மரிக்கத் துணிந்தார், நாம் துணிகிறோமா?

He dared to die, Do we?

F.B.Meyer (1847-1929)

கனிதரும் வாழ்வு வாழ விரும்பும் அநேகர் இன்னும் கிறிஸ்துவின் ஆழமான சிலுவையின் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. அவர் மரித்தது போல நாம் மரிக்க முடியாது, ஆயினும் இதன் ஆழமான கருத்தை நாம் பருகி னால் நாம் உண்மையாக பயனுள்ளவர் களாயிருக்க முடியும்.

நாம் மற்றவர்களை இரட்சிக்க வேண்டுமானால் நம்மை இரட்சிக்க முடியாது. நாம் பிறருக்கு உதவி செய்வ தானால் நாம் உதவியற்றவர்களாயிருப் பதில் திருப்திப்பட வேண்டும். காட்டு ஒலிவக்கிளைகள் நம்மோடு ஒட்டப்பட கத்தி நம்மேல் பட அனுமதித்து திருப்தி யாயிருக்க வேண்டும். உலகத்தை விலை யேறப் பெற்ற எண்ணெயால் இனிய ருசியை அளிக்க விரும்பினால் நாம் உடைக்கப்படும் பெட்டிகளாக இருக்க வேண்டும்.

அதிகக் கனிகளைத் தரும் கிளைகள் அதிலுள்ள இலைகள் தளிர்கள் எல்லாம் விட்டுவிடப்படாமல் வெட்ட அனு மதிக்க வேண்டும். அப்போது தான் அதிலிருந்து சாறு பெருகி வடியும்.

"தன் ஜீவனை சினேகிக்கிறவன் அதை இழந்து போவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிற வனோ அதை நித்திய ஜீவகாலமாக காத்துக்கொள்ளுவான்" யோவா. 12:25.

தேவனுடைய முகத்தை நோக்கிப் பாருங்கள், அப்போது ஜசுவரியமான ஆழமான வாழ்வைப் பெறுவீர்கள். நீங்கள் உங்கள் பாதைகளைத் தெரிந்து கொள்வதில்லை என்று கூறுங்கள், மரணம் வரை அவரைப் பின்பற்ற விரும்புவதாகக் கூறுங்கள். பின்பு ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க அவர் போதிக்கட்டும். அப்பாதை ஆழமான பள்ளத்தாக்கு என்றாலும் உங்கள் உண்மையான சுதந்திரம் பெருகிவரும் வாழ்வாகும்.

மரணம் வழியாகக் கடந்து சென்ற அவர், பள்ளத்தாக்கின் ஒவ்வொரு திருப்பத்தையும் நதியின் ஆழமற்ற பகுதி யையும் அறிவார். அவர் தவறு செய்ய மாட்டார். தேவையற்ற கடின பாதை யிலும் நடத்த மாட்டார். அவரது பாதச் சுவடுகளையும் ஆணி பாய்ந்த கரங்களும் பாதங்களும் அனேகரால் பின்பற்றப் பட்டவை.

அவர் நீங்கள் இதை சகிக்கக் கூடாதவர்கள் அல்லது பெலனற்றவர்கள் என்று அறிந்திருந்தால் இப்பாதை வழியாக நடத்தியிருக்க மாட்டார், அல்லது அவர் அத்தனை பெலனற்ற வராக இருந்தால் கேட்டிற்கு மேல் கேடுதான் ஏற்படும். அவர் அங்கு இருப்பதால் ஒருநாள் 100 தடவைக்கு மேல் அவரது பெயரைச் சொல்லுங்கள். உங்கள் வேதனையில் இயேசுவே இயேசுவே இயேசுவே என்று சொல்லுங்கள்.

பல வேளைகளில் இத்தகைய அனுபவங்களில் அவரது மெல்லிய சத்தம் தெளிவாகக் கேட்கப்படுகிறது. அதன் மூலம் ஆத்துமா பலப்படுத்தப் படுகிறது. சில வேளைகளில் அவரது சத்தத்தைக் கண்டுபிடிக்க முடியாம லிருக்கிறது. ஆனால் அவர் நம்மில் அவரது பெலனை செலுத்தி திறமையும் எளிமையுமான முறையில் நம்மை பெலப்படுத்த வார்த்தைகளுக்குப் பதிலாக அவரே நமது இதயத்தின் பெலனாகவும் நமது பங்காகவும் ஆகி விடுகிறார்.

இரவும் பகலும், குளிர்காலத்தி லிருந்து துளிர் விடும் காலத்திற்கும், அடர் பனியிலிருந்து மலர்களுக்கும், துக்கத்திலிருந்து மகிழ்ச்சிக்கும், அறுப் பதற்குப் பதிலாக கனிதரவும், கல்வாரியி லிருந்து பரமேறுதலுக்கும், மரணத்தி லிருந்து ஜீவனுக்கும், வேதனையின் கூரிலிருந்து நித்திய ஜீவனுக்கும் கிறிஸ்து நம்மை நடத்துகிறார்.

நாம் தந்திரசாலிகளல்ல, தீர்க்க தரிசிகள்! நமது செய்தி சமரசமல்ல, சம்மட்டி! சத்தியத்தைப் பிரசங்கித்து, அதை கேட்பவர்களின் வாழ்க்கையில் அப்பியாசிக்கச் செய்பவனை ஆணி களும், முட்களும் குத்தத்தான் செய்யும். "A.W. டோசர்"

சிந்தனைக்கு: அன்பு

நாம் நம்மை நேசிப்பதைவிட கிறிஸ்து நம்மை அதிகமாக **நேசிக்கிறார்.**

ஆழமான நன்றி தான் நாம் இந்த **அன்பை** அறிந்து கொள்ளவும், விசுவாசிக்கவும் அதை அனுபவிக்கவும் காரணமாகிறது.

ஊட்டச்சத்திற்கும், ஆரோக்கியத்திற்கும், கனிதரும் வாழ்வுக்கும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் கிறிஸ்துவின் ஆழமான, கரையில்லாத கடல் போன்ற **அன்பில்** நிறைந்திருக்க வேண்டும்.

அதிகக் **கனிகளைத்** தரும் கிளைகள் அதிலுள்ள இலைகள் தளிர்கள் எல்லாம் விட்டுவிடப்படாமல் வெட்ட அனுமதிக்க வேண்டும்.

கனிதரும் வாழ்வு வாழ விரும்பும் அநேகர் இன்னும் கிறிஸ்துவின் ஆழமான **சிலுவை**யின் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை.

உலகத்தை விலையேறப் பெற்ற எண்ணெயால் **இனிய** ருசியை அளிக்க விரும்பினால் நாம் **உடைக்கப்படும்** பெட்டிகளாக இருக்க வேண்டும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason